

மேற்கு ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த உயர் அலுவல் தூதுக்குழுவினர் நேற்று (25-01-2024) இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் சந்தித்து மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து சிறந்த திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குவது தொடர்பாக கலந்துரையாடினர். இக்கூட்டத்தில் மேற்கு ஆஸ்திரேலிய துணை முதல்வர், பொருளாளர், போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ரீட்டா சஃபியோட்டி MLA, FRACGP முதல்வரின் பாராளுமன்ற செயலாளர் / மாநில தொழில் வளர்ச்சி, வேலைகள் மற்றும் வர்த்தக அமைச்சர்/பொதுத்துறை மேலாண்மை, கூட்டாட்சிமாநில உறவுகள் டாக்டர்.ஜெகதீஷ் கிருஷ்ணன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு அரசு சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா மற்றும் மேற்கு ஆஸ்திரேலியா உயர் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் உயர் அலுவலர்கள் உள்ளனர்.



மேற்கு ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த உயர் அலுவல் தூதுக்குழுவினர் நேற்று (25-01-2024) இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் சந்தித்து மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து சிறந்த திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குவது தொடர்பாக கலந்துரையாடினர். இக்கூட்டத்தில் மேற்கு ஆஸ்திரேலிய துணை முதல்வர், பொருளாளர், போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ரீட்டா சஃபியோட்டி MLA, FRACGP முதல்வரின் பாராளுமன்ற செயலாளர் / மாநில தொழில் வளர்ச்சி, வேலைகள் மற்றும் வர்த்தக அமைச்சர்/பொதுத்துறை மேலாண்மை, கூட்டாட்சிமாநில உறவுகள் டாக்டர்.ஜெகதீஷ் கிருஷ்ணன் எம்.எல்.ஏ, தமிழ்நாடு அரசு சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா மற்றும் மேற்கு ஆஸ்திரேலியா உயர் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### வளர்ந்து வரும் திறன் தேவைகளுக்கு ஏற்ப

# இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கத் திட்டம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் மேற்கு ஆஸ்திரேலிய குழுவினர் ஆலோசனை!

சென்னை, ஜன. 26-

வளர்ந்து வரும் திறன் தேவைகளுக்கு ஏற்க, இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க, பயிற்றுநர்களை உருவாக்கும் திட்டம் தொடர்பாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடன் மேற்கு ஆஸ்திரேலியாவின் உயர் அலுவலர் தூதுக்குழுவின் ஆலோசித்துள்ளனர்.

இது குறித்து வெளியான செய்திக் குறிப்பு வருமாறு:-

மேற்கு ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த உயர் அலுவல் தூதுக்குழுவினர் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை திறன் மேம்பாட்டு பயிற்சிகள் தொடர்பாக நேற்று (25.01.2024) சந்தித்து கலந்துரையாடினர். இந்த உயர் நிலை அலுவல் பிரதிநிதிகள் குழுவில் மேற்கு ஆஸ்திரேலியாவை சேர்ந்த ரீட்டா சஃபியோட்டி பஸ் எம்.எல்.ஏ. துணை முதல்வர், பொருளாளர், போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர், டாக்டர் ஜெகதீஷ் கிருஷ்ணன் எம்எல்ஏ எம்பிபிஎஸ்; FRACGP முதல்வரின் பாராளுமன்ற செயலாளர், மாநில தொழில் வளர்ச்சி, வேலைகள் மற்றும் வர்த்தக அமைச்சர், பொதுத்துறை மேலாண்மை, கூட்டாட்சி மாநில உறவுகள் ராபி வில்லியம்சன், துணை முதல்வரின் மூத்த ஆலோசகர் மேற்கு ஆஸ்திரேலியா அரசின் பிரிதிநிதி, திருமதி நஷித் சௌத்ரி, முதலீடு மற்றும் வர்த்தக ஆணையர், இந்தியாவளைகுடா, முதலீடு மற்றும் வர்த்தகம், மேற்கு ஆஸ்திரேலியா, மேற்கு ஆஸ்திரேலியா அரசின் பிரதிநிதி திருமதி. கிளியோனா ஜேம்ஸ், இயக்குனர், இந்தியாவளைகுடா, மேற்கு ஆஸ்திரேலியா முதலீடு மற்றும் வர்த்தகம், மேற்கு ஆஸ்திரேலியா அரசின் பிரதிநிதி திருமதி. சுவாதி பாலசுப்ரமணியன், வர்த்தக மேம்பாட்டு மேலாளர், முதலீடு மற்றும் வர்த்தகம், உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து செயலாற்றுவதற்கான சாத்தியகூறுகளை ஆராய்வதே சந்திப்பின் நோக்கமாக இருந்தது. பயிற்சி, மதிப்பீடு மற்றும் சான்றளிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய, ஆசிரியர்களுக்கான விரிவான பயிற்சிகளை கூட்டாக நடத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடலில் ஆராயப்பட்டன.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடனான நெருங்கிய கூட்டுறவைக் கருத்தில் கொண்டு, இளைஞர்களுக்கு வளர்ந்து வரும் திறன் தேவைகளுக்கு ஏற்றவாறு பயிற்சி அளிக்க பயிற்றுநர்களை தயார் செய்யும் திட்டங்களை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

இதை செயல்படுத்துவதற்கான திட்டங்களை செயல்படுத்தும் வண்ணம் மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ஆகிய இரண்டு தரப்பிலும் தொழிற் கல்விக்கான வலுவான கட்டமைப்பை வடிவமைப்பதில் உறுதியுடன் இருக்கும், இது இன்றைய மாறிவரும் வேலைவாய்ப்பு சந்தையில் சிறந்து விளங்குவதற்குத் தேவையான திறன்களைக் கொண்ட தனி நபர்களை மேம்படுத்துவதற்கான கூட்டு நோக்கத்தை பிரதிபலிக்கிறது.

இக்கலந்துரையாடல் கூட்டத்தில் அரசு சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர் டேரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் ஜெ.இன்னசென்ட் திவ்யா மற்றும் மேற்கு ஆஸ்திரேலியா உயர் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கேரள சட்டமன்றத்தில்

# அரசின் முழு உரையைப் படிக்காமல் பாதியில் சென்ற ஆளுநர் !

## ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கியதாக குற்றச்சாட்டு!

திருவனந்தபுரம், ஜன.26-

கேரள சட்டப்பேரவையில் ஆளுநர் ஆரிப் முகமது கான் தனது உரையை முழுமையாக வாசிக்காமல் கடைசி பத்தியை மட்டும் படித்துவிட்டு சென்றது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்கள் மூலம் ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி வருகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளை செயல்பட விடாமல், ஆளுநர்கள் இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றனர். இந்நிலையில், கேரளாவில் கம்யூனிஸ்ட் அரசுக்கு அம்மாநில ஆளுநர் ஆரிப் முகமது கான் தொடர்ந்து பிரச்சினைகளை கொடுத்து வருகிறார்.

கேரளாவில் நேற்று பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் நிலையில், நேற்று முன்தினம் சட்டமன்றம் கூடியது. அப்போது, ஆளுநர் ஆரிப் முகமது கான், 63 பக்கங்கள் கொண்ட தனது உரையை முழுமையாக வாசிக்காமல் கடைசி பத்தியை மட்டும் படித்துவிட்டு சென்றுவிட்டார். கேரள அரசின் கொள்கை திட்டங் களை முழுமையாகப் படிக்க அவர் மறுத்துவிட்டார்.

சட்டப்பேரவைக்கு காலை 9 மணிக்கு வந்த ஆளுநர் ஆரிப் முகமது கான், 1 நிமிடம் 17 நொடிகளில் தனது உரையை முடித்துவிட்டார். 4 நிமிடங்களுக்குள் அவையில் இருந்து கிளம்பி விட்டார்.

கூட்டாட்சிக்கு எதிராக ஒன்றிய அரசு செயல்படுகிறது. உரிய நிதியை மாநிலத்துக்கு வழங்காததால் மாநிலத்தில் ஒன்றிய அரசே நிதி நெருக்கடியை ஏற்படுத்துகிறது என்ற பகுதிகள் ஆளுநர் உரையில் இடம் பெற்றிருந்தது. இதனை ஆளுநர் வாசிக்கவில்லை. ஆளுநர் ஜனநாயகத்தை கேலிப் பொருளாக்கி சட்டமன்றத்தை அவமதித்த தாக அரசியல் கட்சிகள் கருத்து தெரிவித்துள்ளன.

### திருவொற்றியூர் அரசு மருத்துவமனையில்

# ரூ.55 லட்சம் மதிப்பீட்டில் கண் அறுவை சிகிச்சை அரங்கம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.!

சென்னை, ஜன. 26 -

திருவொற்றியூர் அரசு மருத்துவமனையில் நேற்று (25.01.2024) MRF நிறுவனத்தின் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு நிதி (CSR) உதவியின் கீழ் ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் கண் அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் HPCL நிறுவனம் சார்பில் ரூ.20 இலட்சம் மதிப்பிலான மருத்துவ உபகரணங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யனிடம் வழங்கப்பட்டது. பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

திருவொற்றியூர் அரசு மருத்துவமனைகளில் குறிப்பாக பொன்னேரி, திருத்தணி போன்ற அரசு மருத்துவமனைகளில் இருந்து வருகிறது. திருவொற்றியூர் என்பது மக்கள் அடர்த்தியாக வாழும் பகுதிகளில் ஒன்றாக உள்ளது. எனவே இம்மருத்துவமனையில் கண் அறுவை சிகிச்சைக்கான அரங்கம் ஒன்று தனியாக தொடங்கிட வேண்டும் என்று இத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, கே.பி. சங்கர் எம்.எல்.ஏ. கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது. எனவே மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ. முன்னெடுப்பின்படி, MRF நிறுவனத்தின் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு நிதி (CSR) ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் கண் அறுவை சிகிச்சை அரங்கம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது மேலும் கண் மருத்துவர் ஒருவரும் நியமிக்கப்ப ட்டுள்ளனர்.

மேலும் இப்பகுதியில் இயங்கி வரும் HPCL நிறுவனம் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்களை என் மருத்துவமனைக்கு வழங்கியுள்ளது. டிஜிட்டல் எக்ஸ்ரே உள்ளிட்ட அதிநவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. எனவே ஒட்டுமொத்தமாக ரூ.75 இலட்சம் மதிப்பீட்டிலான மருத்துவ கட்டமைப்புகள் இம்மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது. இம்மருத்துவமனையில் புற நோயாளிகள் தினசரி 850 முதல் 900 வரை வருகிறார்கள்.

மேலும் 50 படுக்கை வசதிகளுடன் கூடிய இம்மருத்துவமனையில் உள்நோயாளி கள் 25 முதல் 30 வரை பயன் பெற்று வருகிறார்கள். மேலும் இம்மருத்துவமனையில் போதுமான மருத்துவர்கள் இருந்த போதிலும் மருத்துவ அவசியங்களை கருத்தில் கொண்டு இரவு நேரங்களில் கூடுதல் மருத்துவர்கள் நியமிக்கபட்டு பணியாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா. சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் கலாநிதி வீராசாமி எம்.பி., சுதர்சனம் எம்.எல்.ஏ., கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., துறை அதிகாரிகள் சண்முககனி, விஸ்வநாதன், மரு. மீரா, மண்டலக் குழுத் தலைவர் தனியரசு மற்றும் மருத்துவர்கள் உடனிருந்தனர்


